# காந்திய சிந்தனை கலந்துரையாடல்

19 - 09 -2009

## இம்மானுவேல் அரசா் கல்வியில் கல்லூரி

## நட்டாலம்





உலக அகிம்சை தினம் அக்டோபா் 2 உலகெங்கும் கடைபிடிக்கப்படுகிறது. காந்தி ஜெயந்தி விழாவை உலக அகிம்சை தினமாக கொண்டாடும். விதமாக அதற்கான முன்னோடி கலந்துரையாடல் நிகழ்ச்சி நட்டாலம் இம்மானுவேல் அரசா் கல்வியில் கல்லூரியில் நடைபெற்றது. மாா்த்தாண்டம் இலக்கியப் பேரவையும், இம்மானுவேல் அரசா் கல்வியல் கல்லூரி பேராசிரியா்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனா். பேராசிரியா் ஜெபசிங் அனைவரையும் வரவேற்றாா். மாா்த்தாண்டம் இலக்கியப்பேரவை அமைப்பாளா் முள்ளஞ்சேரி மு. வேலையன் தலைமை வகித்து நடத்திய கலந்துரையாடலில் ஆசிரியை ஆா்.ஆா். ரேகா கருத்துரை வழங்கினாா்.

### முள்ளஞ்சேரி மு. வேலையன் பேசியதாவது

காந்தியம் கற்றுக்கொள்வது மட்டுமல்ல கடைபிடிக்கக்கூடியதுமாகும். காந்தியம் என்றவுடன் கதா் ஆடையும், கைத்தடியும், எளிமையும் நினைவில் நிறுத்திவிட்டாா்கள் அதனால் மனித மனங்களில் விரைந்து பரவக்கூடிய சிந்தனை கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. காந்தியம் என்பது மனித மனங்களை சமன்செய்யக் கூடிய வாழ்க்கை நெறி மனிதப்பிறவில் நடந்த போராட்டங்களில் காந்தியப்போராட்டம்தான் அறவழியில் வென்றதோடு மனித உயிா்களை பாழ்படுத்தாமல் வென்றது.

சா்வோதயம் என்ற எல்லோருடைய நலன் என்ற சித்தாந்தம் கடைபிடிக்கக்கூடிய பொதுவியலாக வழங்கியது.வாய்மையென்ற தத்துவம், உண்ணாநோன்பு என்ற வாழ்க்கை

நெறி அகிம்சையென்ற எண்ணத்தாலும் செயலாலும் பிறருக்கு இம்சை செய்யாதிருக்கும் வாழ்வியல் முறை, ஒத்துழையாமையென்ற போர்முறை, சகிப்புத்தன்மை என்ற எதையும் தாங்கும் மனவுறுதி இவைகளை கற்றுத்தந்தது மட்டுமல்ல கடைபிடிக்கக் கூடியதாக உலகிற்கு வழங்கியதுதான் காந்தியம்.

போராட்ட முறைகளில் கூட மனித தேவைகள், மனித வளர்ச்சி, மனித மாண்பு, மனித நேயம் அடங்கியிருந்தது தான் இதன் சிறப்பு. சொல்லப்படாத தளம் இல்லை எந்த தளத்தில் நின்று யோசித்தாலும் காந்தியம் மனித மேன்மையை பறைசாற்றும்.

உப்பு, ஆடை போன்ற மனித தேவைகள் வைத்து போராட்டமுறை தந்து மனித சக்தியை திரட்டியது. சமூக சீரழிவுகள் போதைப்பழக்கத்துக்கு எதிராக களம் அமைத்தது. மனித ஆரோக்கியம் சுகாதாரம் இவைகளை மேம்படுத்த களம் அமைத்தது மத நல்லியக்கத்திற்கு வலுவான சிந்தனைகள் தந்தது. குடும்ப உறவுமுறை சமூக ஒற்றுமை, எளிமை எல்லாவற்றிற்கும் வழி தந்தது. மூட பழக்க வழக்கங்கள், பெண் கொடுமை பால்ய திருமணம், சிசுக்கொலை இவைகளிலிருந்து மனித மனங்களை விடுவித்தது.

உலக நாடுகளிளெல்லாம் அமைதித்தத்துவத்தை தேடியலைந்தபோது காந்தியம் தந்த அகிம்சை தத்துவம் தான் தென்பட்டது. உலகத் தலைவர்கள் எல்லாம் வியந்து நோக்குகிறார்கள். உலகப்பெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டின் கூறியது போல் ரத்தமும் சதையும் உடைய மாமனிதர் வாழ்ந்திருக்கிறார் என்பதை உலகம் வியக்குகிறது.

இன்று மனித மனங்கள் சிறு பிரச்சனைகளிலிருந்து கூட விடுபட முடியாமல வன்முறையை நாடி தன்னையும் தன்னை சார்ந்தவர்களையும் பாழ்படுத்துகிறது. மனித மனம் சமநிலை அடைய வேண்டுமானால் காந்தியம் தான் அருமருந்து. அது சமயோஜிதம் கற்றுத்தருகிறது. நிதான நடவடிக்கையைக் கற்றுத்தருகிறது. மனவலிமையும், உத்வேகத்தையும் தருகிறது. சவால்களை எதிர்கொள்ளும்திறன். உடம்பைப்பேணுதல் முதல் உள்ளத்தைப் பேணுதல் வரை கற்றுத்தருகிறது. கடைபிடிப்பது கடினம் என்றுணர்ந்து கற்றுக் கொள்ளாமல் விட்டுவிட்டோம். இதனால் விளைவுகளைச் சந்திக்கிறோம். நாகரீக மாற்றங்கள் தரும் வளர்ச்சியும் தேவையானதுதான். மக்கள் அமைதியாக வாழ முடியவில்லையென்றால் அவைகள் பயனற்ற வாழ்க்கையாகிவிடும். இயற்கையை பேணுதல் முதல் தேவைகள் வரை சொல்லித்தந்திருக்கிறது காந்தியம். கற்றுக்கொண்டால் கவலையற்று வாழலாம். இன்னும் எத்தனை தலைமுறைகள் வாழவேண்டுமானாலும் காந்தியம் கற்றுத்தரும்.

காந்திசிலைக்கு மாலை போடுவதோ அவர் உடுத்தியது போன்று ஆடை அணிவதோ கடைபிடித்தல் அல்ல. மனித மாண்புகள் நிறைந்த சிந்தனையை மனதில் நிறுத்திக் கொள்வது தான் சிறப்பு. அது தன்னைப் போலும் தன்னைச்சார்ந்தவர்களுக்கும் அமைதியைக் கொடுக்கும்.

மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டிக்கான தலைப்புகள் வழங்கப்பட்டது. கட்டுரைப்போட்டி 'உலக அமைதிக்கு அகிம்சை' என்னும் தலைப்பில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும் கவிதைப்போட்டி "அண்ணல் வழியில் ஆற்றல் பெறுவோம்" என்ற தலைப்பில் 21 வரிகளுக்கு மிகாமல் எழுத வேண்டும். வருகிற 29-ம் தேதிக்கு முன்னால் கவிதைகள் கட்டுரைகள வந்து சேர வேண்டும். அக்டோபர் 2-ம் தேதி நடக்கும். அண்ணல் காந்தி பிறந்த தின விழா உலக அகிம்சை தினம் நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும்.

காலை 9.00 மணிக்கு தொடங்கும் நிகழ்ச்சியில் பேராசிரியை இரா.தியாக சுவாமி தலைமை வகிக்கிறார். இம்மானுவேல் அரசர் கல்வியில் கல்லூரி செயலர் ஷகிலா சாமுவேல் ஜார்ஜ் குத்துவிளக்கு ஏற்றுகிறார். முன்னாள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருவேங்கடம், வக்கீல் அருளானந்தம், சதீஸ்குமார், ஜாண்சன் மற்றும் பலர் பேசுகின்றனர்.

**அண்ணல் மிகவும் வலியுறுத்தியது** என்னும் தலைப்பில் சுழலும் சொல்லரங்கம் நடைபெறுகிறது. பேராசிரியர் எம்.பி. ஜெயசேகர் தலைமையில் ராபர்ட்குமார், கவிஞர் குமரி ஆதவன், பி.எஸ்.விஜயகுமார், கவிஞர் பிருந்தா சுரேஷ் ஆகியோர் வாதிடுகின்றனர் மாலையில் நடக்கும் **'மாணவர் அரங்கு'** நிகழ்ச்சிக்கு ஆர்.ஆர்.ரேகா தலைமை வகிக்கிறார். பின் நடக்கும் கவியரங்கம் நிகழ்ச்சிக்கு ஜே.ஜோ பிரகாஷ் தலைமை வகிக்கிறார். போட்டிகளில் வென்றவர்களுக்கு இம்மானுவேல் அரசர் கல்வி நிறுவனங்கள் தலைவ் டாக்டர் சாமுவேல் ஜார்ஜ் பரிசு வழங்குகிறார்.


இவண்

முள்ளஞ்சேரி மு. வேலையன்,

அமைப்பாளர்,

மார்த்தாண்டம் இலக்கியப் பேரவை

**9942758333**